செ.வெ.எண்:691 நாள்: 15.10.2019

# புதுக்கோட்டை மாவட்டத்தில் இடிதாக்கி காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு சென்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறினார்.

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் இடி தாக்கி காயமடைந்து புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் (15.10.2019) இன்று நேரில் பார்வையிட்டு அவர்களுக்கு ஆறுதல் கூறினார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டம், குளத்துார் வட்டம், வைத்துார் கிராமத்தை சேர்ந்த தொழிலாளர்கள் தண்ணீர்பந்தல்பட்டி கிராமத்தில் இன்றைய தினம் வயலில் வேலை செய்து வந்தனர். இந்நிலையில் மாலை இடியுடன் கூடிய மழை பெய்த பொழுது வயலில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது இடிதாக்கியதில் 4 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் இதில் காயமடைந்த 26 பேர் உடனடியாக 108 அவசர சிகிச்சை ஊர்தியின் மூலம் மீட்கப்பட்டு புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. காயமடைந்தவர்களை நேரடியாக சந்தித்தும், இதில் உயிரிழந்தவர்களின் உறவினர்களை சந்தித்து ஆறுதலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கும் வகையில் விபரங்கள் அரசுக்கு தற்பொழுது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பேரிடர் மேலாண்மைத் துறையின் மூலம் பருவமழை காலங்களில் பொது மக்கள் பாதுகாப்பாக இருப்பதன் அவசியம் குறித்து எடுத்துரைக்கப்பட்டு வருகிறது. மழைப்பொழிவின் போது திறந்த வெளியில் இதுபோன்று பணிகள் செய்வதை தவிர்த்திடவும், மின்சாதனங்களை பாதுகாப்பான முறையில்

கையாண்டிடவும், அறுந்து கிடக்கும் மின்கம்பிகளின் அருகில் செல்லாமல் இருத்தல், நீர்நிலைகளின் அருகில் குழந்தைகள் விளையாடுவதை தவிர்த்திடவும், கால்நடைகளை மழைப்பொழிவின் போது திறந்தவெளியில் கட்டி வைப்பதை தவிர்த்தல் உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை பொது மக்கள் தொடர்ந்து கடைபிடிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ச.செல்வராஜ், அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மீனாட்சி சுந்தரம், வருவாய் கோட்டாட்சியர் தண்டாயுதபாணி, வட்டாட்சியர் பரணி, மருத்துவர்கள் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**